[7th September 1960

Teachers (Recruitment)

* 529 *Q.*—SRI S. M. ANNAMALAI :
SRI M. P. SARATHI : } கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளில் உயர் பதவிகளில் சர்க்காரே நேரடியாக ஆசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானல், அதன் விபரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No Sir; in the case of posts in Government schools only, the appointments are made by Government or by Officers of the Education Department as the case may be.

(*b*) Does not arise.

Engineering graduates

* 530 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்திலே தற்போது எத்தனை இஞ்ஜினியரின் பட்டதாரிகள் இருக்கிறார்கள் ?

(ஆ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இன்னும் எத்தனை இஞ்ஜினியரிங் பட்டதாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படவேண்டும் ?

(இ) வருடந்தோறும் எத்தனை இஞ்ஜினியர் பட்டதாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government have no information.

(*b*) It has been estimated that roughly 2,200 degree holders will be required for employment under the State Government.

(*c*) At present, the sanctioned intake in all the Colleges in the State is 1,157. It is proposed to increase this by 560 more during the Third Plan.

SRI P. G. MANICKAM : அதிகமான இஞ்ஜினியரின் பட்டதாரிகள் தேவையாக இருப்பதனால், இப்பொழுது இருக்கக்கூடிய கல்லூரிகள் போதியதாக இல்லை. ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதிக கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிதான் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய என்ஜினியரிங் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பதாகச் சொன்னேன். இப்பொழுது இருக்கக்கூடிய கல்லூரிகளில் அதிகமான மாணவர்கள் சேர்த்துக்கொள்வதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது.